முருகப்பெருமான் துணை

**மகான் நாரதர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.07.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. தனிப்பெருங் கருணை வடிவான
   தவசக்திமிகு ஆறுமுக ஞானியே
   கனிவேலவன் தேர்வு செய்த
   கலியுக ஞானியே அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
   அகிலமதில் சோபகிருது நள்ளி திங்கள்
   வரங்களென சப்தமதிகதி கதிர்வாரம்
   (சோபகிருது வருடம் ஆடி மாதம் 07 ம் நாள், 23.07.2023, ஞாயிற்றுக்கிழமை)
   வழங்குவேன் நாரதர் யானும்
3. யானும் அறிவுரை ஆசிதனை
   உலகம் இன்புற உரைப்பேன்
   ஞானமாம் ஜீவ தயவு கொண்ட
   நல்லறிவை புகட்ட வந்த ஞானி
4. ஞானி அரங்க மகானின்
   ஞான உபதேசங்களே கலியில்
   கனிவேலோன் சக்தியாக இருக்க
   கருணைபட செயல் வடிவம் பெற
5. பெறவே ஆற்றல் மிக்க படைப்பாய்
   பேருலகில் ஞானவான்களெனும்
   அறம் மிகுந்த படைகள் பெருகி
   அகிலம் ஆனந்தம் அமைதி நிறைந்த
6. நிறைந்த ஞானபூமியாகவே
   நிலவுலகம் மாற்றம் காண்கும்
   பரந்த ஞான பலமே கொண்ட
   பண்பான பரிபக்குவம் மிகுந்த

7. மிகுந்த சீடர்களாக சேவகர்களாக
மேலவர்களாக நிலை தேறி
தகுந்த ஞானத் தலைமைதனை
தவராஜன் நோக்கமாக நிறைவேற்றி
8. நிறைவேற்றி ஞான ஆட்சி
நிலவுலகம் காண வழிவகை
மறைபோற்ற அரங்க ஞானியால்
மாற்றம் உலகில் நடக்கும்
9. நடக்குமே பிரணவக்குடிலில்
ஞானசபை கூட்டமாக
தடையற மாதாந்திரம் கூட்டி
தக்க வழிகாட்டல் அம்சமாக
10. ஆகவே ஆறுமுகன் இறங்கி
ஆற்றல்பட அற்புதம் நடத்த
வகையான வழிவகை துவக்கி
வருங்காலம் பாதுகாப்பை தருகின்ற
11. தருகின்ற ஞான ஆட்சியாக
தரம் குறையா தருமம் நிறைய
முருகப்பெருமான் ஆளுமையாக
முழுமை மாற்றம் காண்கும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—